ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 14,925/5 — 1970 සැප්තැම්බර් 30 වැනි බදාදා — 1970.9.30
14,925/5 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1965 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விடுமுறை நாட்கள் சட்டம்

**14 (1) (அ) பிரிவின் கீழான கட்டளை**

1965 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விடுமுறை நாட்கள் சட்டத்தின் 14 (1) (அ) பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பிலிக்ஸ் றெஜினல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், ஐக்கிய அரபுக் குடியரசின் ஜனாதிபதி கமால் அப்துல் நாஸர் அவர்கள் மரணம் அடைந்ததையிட்டு, 1970, அக்டோபர் முதலாம் நாள், மேற் குறிப்பிட்ட சட்டத்தின் இரண்டாம் அட்டவணையிற் குறிக்கப்பட்ட நாட்களுடன் மேலதிகமாக, அச்சட்டத்தின் நோக்கங்களுக்கென வங்கி விடுமுறை நாளாதல் வேண்டுமென இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகிறேன்.

கொழும்பு,
செத்தெம்பர் 30, 1970.
9–237/1.

பிலிக்ஸ் றெஜினல்ட் டயஸ் பண்டாரநாயக்க,
பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர்.

---

### 1965 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விடுமுறை நாட்கள் சட்டம்

**13 (1) (அ) பிரிவின் கீழான கட்டளை**

1965 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விடுமுறை நாட்கள் சட்டத்தின் 13 (1) (அ) பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பிலிக்ஸ் றெஜினல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், ஐக்கிய அரபுக் குடியரசின் ஜனாதிபதி கமால் அப்துல் நாஸர் அவர்கள் மரணம் அடைந்ததையிட்டு, 1970, அக்டோபர் முதலாம் நாள், மேற் குறிப்பிட்ட சட்டத்தின் முதலாம் அட்டவணையிற் குறிப்பிட்ட நாட்களுடன் மேலதிகமாக, அச் சட்டத்தின் நோக்கங்களுக்கென அரசாங்க விடுமுறை நாளாதல் வேண்டுமென இக் கட்டளை மூலம் வெளிப்படுத்துகிறேன்.

கொழும்பு,
செத்தெம்பர், 30 1970.
9–237/2.

பிலிக்ஸ் றெஜினல்ட் டயஸ் பண்டாரநாயக்க,
பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர்.

---

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

(2 ம் அத்தியாயம் ஆகிய) பொருள் கோடற் கட்டளைச் சட்டத்தின் 12 ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் (173 ம் அத்தியாயம் ஆகிய) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழ், வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர்—

(1) திரு. வின்சென்ட் பண்டித என்பவர் (நானாவித பொருட்கள்) பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரியாக நியமனஞ் செய்யப்பட்டதை 1970 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13 ஆந் திகதியிலிருந்து நீக்கஞ் செய்துள்ளார்.

(2) கைத்தொழில் விஞ்ஞான அலுவல் அமைச்சைச் சேர்ந்த திரு. ஐ. ஒ. கே. ஜீ. பெர்னாந்தோவையும், திரு. பி. சி. ஆர். ஜயசிங்க என்பவரையும் தமது கடமைகளுடன் இலங்கை முழுவதிற்கும் (நானாவித பொருட்கள்) பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரிகளாகவும் முன்னே சொல்லப்பட்ட தேதியிலிருந்து நியமனஞ் செய்துள்ளார்.

ஜே. பி. கெலேகம,
நிரந்தரக் காரியதரிசி,
வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சு.

கொழும்பு,
செப்டெம்பர் 27, 1970.
9–235.

# விலைக் கட்டளைகள்

## விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

(173 ம் அத்தியாயமாகிய) விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், (நானாவித பொருள்கள்) பிரதி விலைக் கட்டுப்பாட்டு அதிகாரியாகிய இல்லகுட்டி ஒலிவர் கெனெத் காமினி பர்னாந்து ஆகிய நான், பின்வருமாறு கட்டளையிடுகிறேன் :—

1. இக்கட்டளை 1970 ம் ஆண்டின் (பற்பசைக் குழாய்கள்) விலைக்கட்டுப்பாட்டுக் கட்டளை இல. 1 என எடுத்துக்காட்டப்படலாம்,

2. இக்கட்டளை தீவு முழுவதற்கும் ஏற்புடையதாகும்,

3. இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

   (1) இதற்குள்ள அட்டவணையின் 1 ம், 2 ம் நிரையில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளின் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக ஒரு வியாபாரிக்கு விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம், 2 ம் நிரையில் விபரிக்கப்பட்ட பொருளை இரு டசின்களுக்கு குறையாத ஏதேனும் தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் ;

   (2) இதற்குள்ள அட்டவணையின் 1 ம், 2 ம் நிரையில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் இரு டசின்களுக்கு குறைந்த எத்தொகையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும்.

4. இதனோடிருக்கும் அட்டவணையின் 3 ம், 4 ம், 5 ம் நிரைகளிலுள்ள ஒவ்வொருபதிவிலும் குறிக்கப்பட்டுள்ள விலைகள், அவ்வட்டவணையின் 1 ம், 2 ம் நிரையில் இயைபான பதிவில் காட்டப்பட்டுள்ள விபரத்தினைக் கொண்ட எவ்வித பற்பசை குழாய் வகைகளும், அவற்றிற்கு மேல் விற்கப்படலாகா, 1970 ம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் முறையே உற்பத்தியாளரினது ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையும் மொத்த வியாபாரியினது ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையும் சில்லறை வியாபாரியினது ஆகக் கூடிய சில்லறை விலையும் ஆதல் வேண்டும்.

5. இதற்குள்ள அட்டவணையின் 1 ம், 2 ம் நிரையில் விபரிக்கப்பட்ட பற்பசைக்குழாய்களின் எத்தொகையையும் விற்பனைக்காகத் தம்வசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், அந்த பற்பசைக் குழாய்களின் விவரணமும் ஒரு அங்குல உயரத்துக்குக் குறையாத எண்களில் இக்கட்டளையால் அத்தகைய பற்பசைக் குழாய்களுக்கு விதிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகளும் குறிப்பிடப்பட்டதொரு அறிவித்தலை, வாங்குபவரால் காணக்கூடியவாறு பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

6. மொத்தமாக அல்லது சில்லறையாக இந்த அட்டவணையின் 1 ம், 2 ம் நிரல்களில் விபரிக்கப்பட்டுள்ள பற்பசைக் குழாய்கள் எதனையும் விற்கும் ஆள் ஒவ்வொருவரும்,

   (அ) விற்பனைத் தேதி,

   (ஆ) விற்கப்பட்ட பற்பசைக் குழாய்களின் விவரணமும் தொகையும்,

   (இ) விற்கப்பட்ட தொகைக்கு அறவிடும் விலை,

   (ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா,

   என்பன அதில் காட்டப்பட்டுள்ள பற்றுச்சீட்டு ஒன்றினை விலைக்கு வாங்குபவரிற்குக் கொடுத்தல் வேண்டும்.

7. இதனோடிருக்கும் அட்டவணையின் 1 ம், 2 ம் நிரையில் குறிப்பிடப்பட்டுள்ள பற்பசைக் குழாய்கள் எதிலும் அதன் மொத்த அல்லது சில்லறை வியாபாரியாகத் தொழில் நடாத்தும் ஆள் ஒவ்வொருவரும் எந்த மாவட்டத்தில் தொழில் நடாத்தப்படுகிறதோ அம்மாவட்டத்தின் பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு,

   (அ) அவ்விபரத் திரட்டு தயாரிக்கப்படும் அந்நேரத்தில் தம் வசமுள்ள அல்லது தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள அத்தகைய பற்பசைக்குழாய்களின் கையிருப்பினையும்,

   (ஆ) அத்தகைய கையிருப்புகள் வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருபண்டகசாலையையும் வேறிடத்தையும் குறிப்பிட்டு விவரத்திரட்டு ஒன்றினை 1970 ம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 15 ம் தேதி நண்பகல் 12 மணிக்குப் பிந்தாமல் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இதற்குள்ள அட்டவணையின் 3 ம், 4 ம், 5 ம் நிரைகளுள் ஒவ்வொன்றிலும் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகள் விற்கப்படும் பற்பசைக் குழாய்கள் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையையும் உள்ளடக்கும்.

கொழும்பு,
செப்தெம்பர் 30, 1970.

ஐ. ஓ. கே. ஜி. பெர்னாண்டோ,
பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி.
(நானாவித பொருட்கள்)

### அட்டவணை

#### நசுக்கக்கூடிய குழாய்களில் பற்பசை

| (1) வணிகக் குறியும் அடைப்பும் | (2) பற்பசையின் ஆகக்குறைந்த நிறை | (3) உற்பத்தியாளரினது ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை பற்பசைகுழாய் ஒன்றிற்கு ரூ. ச. | (4) மொத்த வியாபாரியினது ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை பற்பசைக் குழாய் ஒன்றிற்கு ரூ. ச. | (5) சில்லறைவியாபாரியினது ஆகக்கூடிய சில்லறை விலை பற்பசைக்குழாய் ஒன்றிற்கு ரூ. ச. |
|---|---|---|---|---|
| எஸ். ஆர். பற்பசை (சிக்கனமான) | 4·8 அவுன்ஸ் | 2 12 | 2 23 | 2 65 |
| எஸ். ஆர். பற்பசை (பெரிய) | 2·8 அவுன்ஸ் | 1 46 | 1 54 | 1 85 |
| எஸ். ஆர். பற்பசை (இடை) | 1·7 அவுன்ஸ் | 1 07 | 1 13 | 1 35 |
| பெப்சொடன்ற் பற்பசை | 2·8 அவுன்ஸ் | 1 51 | 1 59 | 1 90 |
| சிக்னல் பற்பசை (சிக்கனமான) | 4·8 அவுன்ஸ் | 2 22 | 2 33 | 2 80 |
| சிக்னல் பற்பசை (பெரிய) | 2·8 அவுன்ஸ் | 1 57 | 1 65 | 1 95 |
| சிக்னல் பற்பசை (இடை) | 1·7 அவுன்ஸ் | 1 12 | 1 18 | 1 40 |
| போர்ஹான்ஸ் பற்பசை (சிக்கனமான) | 5·5 அவுன்ஸ் | 2 23 | 2 34 | 2 80 |
| போர்ஹான்ஸ் பற்பசை (பெரிய) | 3·5 அவுன்ஸ் | 1 58 | 1 66 | 2 0 |
| போர்ஹான்ஸ் பற்பசை நியம அடைப்பு | 1·8 அவுன்ஸ் | 1 08 | 1 14 | 1 35 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்டவற்றை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல, இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்கள் விற்பனை செய்தல் கூடாது.

9-236/1.

## விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

(173 ம் அத்தியாயமாகிய) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் (நானாவித பொருள்கள்) பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரியாகிய இல்லகுட்டி ஒலிவர் கெனெத் காமினி பர்னாந்து ஆகிய நான், பின்வருமாறு கட்டளையிடுகிறேன் :—

1. இக்கட்டளை 1970 ம் ஆண்டின் (மின்சூள் பற்றறிகளும் ட்ரான்சிஸ்டர் றேடியோ பற்றறிகளும்) விலைக் கட்டுப்பாட்டுக் கட்டளை இலக்கம் 1 என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இக்கட்டளை தீவு முழுவதற்கும் ஏற்புடையதாகும்,

3. இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

   (1) இதற்குள்ள அட்டவணையின் 1 ம் நிரையில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக ஒரு வியாபாரிக்கு விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் நிரையில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை இரு டசின்களுக்குக் குறையாத ஏதேனும் தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகக் கருதப்படும் ;

   (2) இதற்குள்ள அட்டவணையின் 1 ம் நிரையில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் இரு டசின்களுக்குக் குறைந்த எத்தொகையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகக் கருதப்படும்.

4. இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் நிரைகளிலுள்ள ஒவ்வொரு பதிவிலும் குறிக்கப்பட்டுள்ள விலைகள் அவ்வட்டவணையின் 1 ம் நிரையில் இயைபான பதிவில் காட்டப்பட்டுள்ள விபரத்தினைக் கொண்ட எவ்வித மின்சூள் பற்றறிகள், ட்ரான்சிஸ்டர் றேடியோ பற்றறி வகைகளும், அவற்றிற்கு மேல் விற்கப்படலாகா, 1970 ம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் முறையே உற்பத்தியாளரினது ஆகக் கூடிய மொத்த விற்பனை விலையும் மொத்த வியாபாரியினது ஆகக் கூடிய மொத்த விற்பனை விலையும் சில்லறை வியாபாரியினது ஆகக் கூடிய சில்லறை விலையும் ஆதல் வேண்டும்.

5. இதற்குள்ள அட்டவணையின் 1 ம் நிரையில் விபரிக்கப்பட்ட மின்சூள் பற்றறிகள், ட்ரான்சிஸ்டர் பற்றறிகள் எதனையும் விற்பனைக்காகத் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், அந்த மின்சூள் பற்றறிகளினதும், ட்ரான்சிஸ்டர் றேடியோ பற்றறிகளினதும் விவரணமும் ஒரு அங்குல உயரத்துக்குக் குறையாத எண்களில் இக்கட்டளையால் அத்தகைய மின்சூள் பற்றறிகளுக்கு, ட்ரான்சிஸ்டர் பற்றறிகளுக்கு விதிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகளும் குறிப்பிடப்பட்டதொரு அறிவித்தலை வாங்குபவரால் காணக்கூடியவாறு பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும் ;

6. மொத்தமாக அல்லது சில்லறையாக இக்கட்டளையின் 1 ம் நிரலில் விபரிக்கப்பட்ட மின்சூள் பற்றறிகள், ட்ரான்சிஸ்டர் றேடியோ பற்றறிகள் எதனையும் விற்கும் ஆள் ஒவ்வொருவரும்—

   (அ) விற்பனைத் தேதி ;

   (ஆ) விற்கப்பட்ட மின்சூள் பற்றறிகளினதும், ட்ரான்சிஸ்டர் றேடியோ பற்றறிகளினதும் விவரணமும் தொகையும் ;

   (இ) விற்கப்பட்ட தொகைக்கு அறவிடப்படும் விலை ;

   (ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா,

என்பன அதில் காட்டப்பட்டுள்ள பற்றுச்சீட்டு ஒன்றினை விலைக்கு வாங்குபவருக்குக் கொடுத்தல் வேண்டும்.

7. இதனோடிருக்கும் அட்டவணையின் 1 ம் நிரையில் குறிப்பிட்டுள்ள மின்சூள் பற்றறிகள், ட்ரான்சிஸ்டர் றேடியோ பற்றறிகள் எதிலும் அதன் மொத்த அல்லது சில்லறை வியாபாரியாகத் தொழில் நடாத்தும் ஆள் ஒவ்வொருவரும் எந்த மாவட்டத்தில் தொழில் நடாத்தப்படுகிறதோ அம்மாவட்டத்தின் பிரதி விலை கட்டுப்பாட்டதிகாரிக்கு—

   (அ) அவ்விபரத்திரட்டு தயாரிக்கப்படும் அந்நேரத்தில் தம்வசமுள்ள அல்லது தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள அத்தகைய மின்சூள் பற்றறிகளினதும் ட்ரான்சிஸ்டர் றேடியோ பற்றறிகளினதும் கையிருப்பினையும் ;

   (ஆ) அத்தகைய கையிருப்புகள் வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பண்டகசாலையையும் வேறிடத்தையும் குறிப்பிட்டு விபரத் திரட்டு ஒன்றினை 1970 ம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 15 ம் தேதி நண்பகல் 12 மணிக்குப் பிந்தாமல் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இதற்குள்ள அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் நிரைகளுள் ஒவ்வொன்றிலும் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகள் விற்கப்படும் மின்சூள் பற்றறிகள், ட்ரான்சிஸ்டர் றேடியோ பற்றறிகள் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலன் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையையும் உள்ளடக்கும்.

கொழும்பு,
செப்தெம்பர் 30, 1970.

ஐ. ஒ. கே. ஜீ. பெர்னாண்டோ,
பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி,
(நானாவித பொருள்கள்).

### அட்டவணை

#### மின்சூள் பற்றறிகளும் ட்ரான்சிஸ்டர் றேடியோ பற்றறிகளும்

| நிரல் 1 மார்க் | நிரல் 2 பற்றறி ஒன்றுக்கு உற்பத்தியாளரினது மொத்த விற்பனை விலை | நிரல் 3 பற்றறி ஒன்றுக்கு மொத்த வியாபாரியினது ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை | நிரல் 4 பற்றறி ஒன்றுக்கு சில்லறை வியாபாரியினது ஆகக்கூடிய சில்லறை விலை |
|---|---|---|---|
| மின்சூள் பற்றறிகள்—விட்டம் 1·2″ ற்குக் குறையாமலும் 1·26″ ற்குக் கூடாமலும், உயரம்—2·38″ ற்குக் குறையாமலும் 2·45″ ற்குக் கூடாமலும் | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| எவரெடி ஸ்ராண்டட் மின்சூள் பற்றறிகள் | 0 52 | 0 55 | 0 60 |
| பெரெக்-யூ2 மின்சூள் பற்றறிகள் | 0 52 | 0 55 | 0 60 |
| லக்சபான-யூ எம்2 மின்சூள் பற்றறிகள் | 0 52 | 0 55 | 0 60 |
| ட்ரான்சிஸ்டர் றேடியோ பற்றறிகள்—விட்டம் 1·2″ ற்குக் குறையாமலும் 1·26″ க்குக் கூடாமலும், உயரம்—2·38″ ற்குக் குறையாமலும் 2·45″ ற்குக் கூடாமலும் | | | |
| எவரெடி ஸ்ராண்டட் ட்ரான்சிஸ்டர் பற்றறிகள் | 0 55 | 0 58 | 0 63 |
| பெறெக் பீபீ. 12 ட்ரான்சிஸ்டர் றேடியோ பற்றறிகள் | 0 55 | 0 58 | 0 63 |

குறிப்பு.—மேற்குறிக்கப்பட்டவை விற்பனை செய்வதற்கு நியமிக்கப்பட்ட விலைகள் அல்ல. மேற்குறிக்கப்பட்டதறகு மேலதிகமாக விற்பனை செயதல் கூடாது.

9-236/2

## விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

(173 ம் அத்தியாயமாகிய) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், (நானாவித பொருள்கள்) பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரியாகிய இலக்குட்டி ஒலிவர் கெனத் காமினி பர்னாந்து ஆகிய நான், பின்வருமாறு கட்டளையிடுகின்றேன் :—

1. இக்கட்டளை 1970 ம் ஆண்டின் (குடைகள்) விலைக் கட்டுப்பாட்டுக் கட்டளை இல. 1 என எடுத்துக்காட்டப்படலாம்,

2. இக்கட்டளை தீவு முழுவதற்கும் ஏற்புடையதாகும்,

3. இக்கட்டளையின் நோக்கங்களுக்கு—

   (1) இதற்குள்ள அட்டவணையின் 1 ம் நிரையில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக ஒரு வியாபாரிக்கு விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் நிரையில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு டசினுக்குக் குறையாத ஏதேனும் தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகக் கருதப்படும்,

   (2) இதற்குள்ள அட்டவணையின் 1 ம் நிரையில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு டசினுக்குக் குறைந்த எத்தொகையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகக் கருதப்படும் ;

4. இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் நிரைகளிலுள்ள ஒவ்வொரு பதிவிலும் குறிக்கப்பட்டுள்ள விலைகள், அவ்வட்டவணையின் 1 ம் நிரையில் இயைபான பதிவில் காட்டப்பட்டுள்ள விபரத்தினைக் கொண்ட எவ்வித குடைகளும் அவற்றிற்கு மேல் விற்கப்படலாகா, 1970 ம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் முறையே உற்பத்தியாளரினது ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையும் மொத்த வியாபாரியினது ஆகக் கூடிய மொத்த விற்பனை விலையும் பாவிப்பாளருக்கு விற்கும் சில்லறை வியாபாரியினது ஆகக் கூடிய சில்லறை விலையும் ஆதல் வேண்டும்.

5. இதற்குள்ள அட்டவணையின் 1 ம் நிரையில் விபரிக்கப்பட்ட குடைகள் எதனையும் விற்பனைக்காகத் தம் வசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், அந்தக் குடைகளின் விவரணமும் ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில் இக்கட்டளையால் அத்தகைய குடைகளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளும் குறிப்பிட்டதொரு அறிவித்தலை வாங்குபவரால் காணக்கூடியவாறு பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

6. மொத்தமாக அல்லது சில்லறையாக இதன் அட்டவணையின் 1 ம் நிரலில் விபரிக்கப்பட்ட குடைகள் எதனையும் விற்கும் ஆள் ஒவ்வொருவரும்,

   (அ) விற்பனைத் தேதி,
   (ஆ) விற்கப்பட்ட குடைகளின் விவரணமும் தொகையும்,
   (இ) விற்கப்பட்ட தொகைக்கு அறவிடப்படும் விலை,
   (ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா,

   என்பன அதில் காட்டப்பட்டுள்ள பற்றுச் சீட்டு ஒன்றினை விலைக்கு வாங்குபவருக்குக் கொடுத்தல் வேண்டும்.

7. இதனோடிருக்கும் அட்டவணையின் 1 ம் நிரையில் விபரிக்கப்பட்டுள்ள குடைகள் எதிலும் அதன் மொத்த அல்லது சில்லறை வியாபாரியாகத் தொழில் நடாத்தும் ஒவ்வொருவரும் எந்த மாவட்டத்தில தொழில் நடாத்தப்படுகிறதோ அம்மாவட்டத்தின் பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு,

   (அ) அவ்விவரத் திரட்டு தயாரிக்கப்படும் அந்நேரத்தில் தம்வசமுள்ள அல்லது தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள அத்தகைய குடைகளின் கையிருப்பினையும்,

   (ஆ) அத்தகைய கையிருப்புகள் வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பண்டகசாலையையும் வேறிடத்தையும் குறிப்பிட்டு விவரத் திரட்டு ஒன்றினை 1970 ம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 15 ந் திகதி நண்பகல் 12 மணிக்குப் பிந்தாமல் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இதற்குள்ள அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் நிரைகளுள் ஒவ்வொன்றிலும் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகள் விற்கப்படும் குடைகள் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையையும் உள்ளடக்கும்.

ஐ. ஓ. கே. ஜி. பெர்னாண்டோ,
பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி,
(நானாவித பொருள்கள்).

கொழும்பு,
செப்தெம்பர் 30, 1970

### அட்டவணை

#### குடைகள்

| 1<br>விபரங்கள் | 2<br>குடை ஒன்றின் உற்பத்தியாளரினது ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை<br>ரூ. ச. | | 3<br>குடை ஒன்றின் மொத்த வியாபாரியினது ஆகக் கூடிய மொத்த விற்பனை விலை<br>ரூ. ச. | | 4<br>குடை ஒன்றின் சில்லறை வியாபாரியினது ஆகக் கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| பிரித்தானிய ஐக்கிய சாம்ராஜ்யத்தில் உற்பத்தி செய்யப்பட்ட துணியுடனும், உள்நாட்டு அல்லது இறக்குமதி செய்யப்பட்ட வேறு எந்த கருப்பொருள்களுடனும், 23" ற்குக் குறையாமலும் 26" ற்கு மேற்படாத அளவுடைய குடைக் கம்பிகளுடன் இலங்கையில உற்பத்தி செய்யப்பட்ட குடைகள் .. | 20 50 | .. | 21 50 | .. | 23 0 |
| பிரித்தானிய ஐக்கிய சாம்ராஜ்யத்தில் உற்பத்தி செய்யப்பட்ட துணியுடன் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட வேறு எந்தக் கருப்பொருட்களுடனும், 17" ற்குக் குறையாமலும் 22" ற்கு மேற்படாத அளவுடைய குடைக் கம்பிகளுடன் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட குடைகள் .. | 16 70 | .. | 17 50 | .. | 19 0 |
| பிரித்தானிய ஐக்கிய சாம்ராஜ்ய நாடு அல்லாத வேறு எந்த நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட துணியுடனும், உள்நாடு அல்லது இறக்குமதி செய்யப்பட்ட வேறு எந்தக் கருப்பொருட்களுடனும், 23" ற்குக் குறையாமலும் 26" ற்கு மேற்படாத அளவுடைய குடைக் கம்பிகளுடன் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட குடைகள் .. .. .. | 16 20 | .. | 17 0 | .. | 18 0 |
| பிரித்தானிய ஐக்கிய சாம்ராஜ்ய நாடு அல்லாத வேறு எந்த நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட துணியுடனும், உள்நாடு அல்லது இறக்குமதி செய்யப்பட்ட வேறு எந்தக் கருப்பொருட்களுடனும், 17" ற்குக் குறையாமலும் 22" ற்கு மேற்படாத அளவுடைய குடைக் கம்பிகளுடன் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட குடைகள் .. .. .. | 13 70 | .. | 14 50 | .. | 16 0 |

குறிப்பு.—மேற் குறிக்கப்பட்டவை விற்பனை செய்வதற்கு நியமிக்கப்பட்ட விலைகள் அல்ல. மேற்குறிக்கப்பட்டதற்கு மேலதிகமான விற்பனை செய்தல் கூடாது.

9-236/3

## விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

(173 ம் அத்தியாயமாகிய) விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்கள் பிரகாரம், (நானாவித பொருள்கள்) பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரியாகிய இல்லகுட்டி ஒலிவர் கெனெத் காமினி பர்னாந்து ஆகிய நான், பின்வருமாறு கட்டளையிடுகிறேன் :—

1. இக்கட்டளை 1970 ம் ஆண்டின் (பைசிக்கிள் ரயர்களும் டியூப்புகளும்) விலைக் கட்டுப்பாட்டுக் கட்டளை இல. 1 என எடுத்துக்காட்டப்படலாம் ;
2. இக்கட்டளை தீவு முழுவதற்கும் ஏற்புடையதாகும் ;
3. இக்கட்டளையின் நோக்கத்திற்காக—
   (1) இதற்குள்ள அட்டவணையின் 1 ம் நிரையில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக ஒரு வியாபாரிக்கு விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் நிரையில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு டசினுக்குக் குறையாத ஏதேனும் தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் ;
   (2) இதற்குள்ள அட்டவணையின் 1 ம் நிரையில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு டசினுக்கு குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும் ;
4. இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் நிரைகளிலுள்ள ஒவ்வொரு பதிவிலும் குறிக்கப்பட்டுள்ள விலைகள், அவ்வட்டவணையின் 1 ம் நிரையில் இயைபான பதிவில் காட்டப்பட்டுள்ள விவரத்தினைக் கொண்ட எவ்வித பைசிக்கிள் ரயர்கள்/டியூப்புக்கள் வகைகளும், அவற்றிற்கு மேல் விற்கப்படலாகா, 1970 ம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் முறையே உற்பத்தியாளரினது ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையும் மொத்த வியாபாரியினதும் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையும் சில்லறை வியாபாரியினது ஆகக்கூடிய சில்லறை விலையும் ஆதல் வேண்டும் ;
5. இதற்குள்ள அட்டவணையின் 1 ம் நிரையில் விவரிக்கப்பட்டுள்ள பைசிக்கிள் ரயர்கள், டியூப்புக்கள் எதனையும் விற்பனைக்காகத் தம் வசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், அந்த பைசிக்கிள் ரயர்கள்/டியூப்புக்களின் விவரணமும் ஒரு அங்குல உயரத்துக்குக் குறையாத எண்களில் இக்கட்டளையால் அத்தகைய பைசிக்கிள் ரயர்களுக்கு அல்லது டியூப்புக்களுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளும் குறிப்பிடப்பட்டதொரு அறிவித்தலை, வாங்குபவரால் காணக்கூடியவாறு பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்திருத்தல் வேண்டும் ;

(6) மொத்தமாக அல்லது சில்லறையாக இவ்வட்டவணையின் 1 ம் நிரலில் விபரிக்கப்பட்டுள்ள பைசிக்கிள் ரயர்களும், அல்லது டியூப்புக்களும் எதனையும் விற்கும் ஆள் ஒவ்வொருவரும்,
   (அ) விற்பனைத் தேதி ;
   (ஆ) விற்கப்பட்ட பைசிக்கிள் ரயர்களின் அல்லது டியூப்புக்களின் விவரணமும் தொகையும் ;
   (இ) விற்கப்பட்ட ரயருக்கு அல்லது டியூப்புக்கு அறவிடப்படும் விலை ;
   (ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா,
   என்பன அதில் காட்டப்பட்டுள்ள பற்றுச் சீட்டு ஒன்றினை விலைக்கு வாங்குபவருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(7) இதனோடிருக்கும் அட்டவணையின் 1 ம் நிரையில் குறிப்பிடப்பட்டுள்ள பைசிக்கிள் ரயர்கள் அல்லது டியூப்புக்கள் எதிலும் அதன் மொத்த அல்லது சில்லறை வியாபாரியாகத் தொழில் நடாத்தும் ஆள் ஒவ்வொருவரும் எந்த மாவட்டத்தில் தொழில் நடாத்தப்படுகின்றதோ அம்மாவட்டத்தில் பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு,
   (அ) அவ்விவரத்திரட்டு தயாரிக்கப்படும் அந்நேரத்தில் தம்வசமுள்ள அல்லது தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள அத்தகைய பைசிக்கிள் ரயர்களின், அல்லது டியூப்புக்களின் கையிருப்பினையும் ;
   (ஆ) அத்தகைய கையிருப்புகள் வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பண்டகசாலையையும் வேறிடத்தையும் குறிப்பிட்டு விவரத்திரட்டு ஒன்றினை 1970 ம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 15 ம் திகதி நண்பகல் 12 மணிக்குப் பிந்தாமல் சமர்ப்பித்தல் வேண்டும் ;

(8) இதற்குள்ள அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் நிரைகளுள் ஒவ்வொன்றிலும் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகள் விற்கப்படும் பைசிக்கிள் ரயர்களையும் அல்லது டியூப்புக்களைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையையும் உள்ளடக்கும்.

கொழும்பு,
செப்தெம்பர் 30, 1970.

ஐ. ஓ. கே. ஜி. பெர்னாண்டோ,
பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி,
(நானாவிதப் பொருள்கள்).

### அட்டவணை

#### பைசிக்கிள் ரயர்களும் ரியூப்புக்களும்

| (1) மார்க் | (2) உற்பத்தியாளரினது ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை ரூ. ச. | (3) மொத்த வியாபாரியினது ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை ரூ. ச. | (4) சில்லறை வியாபாரியினது ஆகக்கூடிய சில்லறை விலை ரூ. ச. |
|---|---|---|---|
| லோட்டஸ் ஸ்ராண்டட் பைசிக்கிள் டயர்களின் அளவுகள் | | | |
| 28 × 1½" / 24" × 1 3/8" / 26" × 1 3/8" | 5 35 டயர் ஒன்றிற்கு | 5 50 டயர் ஒன்றிற்கு | 6 00 டயர் ஒன்றிற்கு |
| லோட்டஸ் பாரவேலே பைசிக்கிள் டயர்களின் அளவுகள் | | | |
| 28" × 1½" | 7 15 டயர் ஒன்றிற்கு | 7 40 டயர் ஒன்றிற்கு | 8 00 டயர் ஒன்றிற்கு |
| 20" × 2 × 1 3/4" / 26" × 1 3/4" | 8 15 டயர் ஒன்றிற்கு | 8 40 டயர் ஒன்றிற்கு | 9 00 டயர் ஒன்றிற்கு |
| லோட்டஸ் பைசிக்கிள் டியூப்களின் அளவுகள் | | | |
| 24" × 1 3/8" / 26" × 1 3/8" / 28" × 1½" | 2 30 ரியூப் ஒன்றிற்கு | 2 35 ரியூப் ஒன்றிற்கு | 2 50 ரியூப் ஒன்றிற்கு |
| லோட்டஸ் ஸ்ராண்டட் பைசிக்கிள் ரியூப்களின் அளவுகள் | | | |
| 20" × 2 × 1 3/4" / 26" × 1 3/4" | 2 50 ரியூப் ஒன்றிற்கு | 2 55 ரியூப் ஒன்றிற்கு | 2 75 ரியூப் ஒன்றிற்கு |
| லோட்டஸ் பொருத்தில்லா பைசிக்கிள் ரியூப்களின் அளவுகள் | | | |
| 26" × 1 3/8" / 28" × 1½" | 3 25 ரியூப் ஒன்றிற்கு | 3 30 ரியூப் ஒன்றிற்கு | 3 50 ரியூப் ஒன்றிற்கு |
| சின்வா பைசிக்கிள் ரயர்களின் அளவுகள் | | | |
| 28" × 1½" / 26" × 1 3/8" | 6 25 ரயர் ஒன்றிற்கு | 6 40 ரயர் ஒன்றிற்கு | 6 90 ரயர் ஒன்றிற்கு |
| சின்வா பைசிக்கிள் ரியூப்களின் அளவுகள் | | | |
| 28" × 1½" / 26" × 1 3/8" | 2 30 ரியூப் ஒன்றிற்கு | 2 35 ரியூப் ஒன்றிற்கு | 2 50 ரியூப் ஒன்றிற்கு |

குறிப்பு.—மேற்குறிக்கப்பட்டவை விற்பனை செய்வதற்கு நியமிக்கப்பட்ட விலைகள் அல்ல. மேற்குறிக்கப்பட்டதற்கு மேலதிகமாக விற்பனை செய்தல் கூடாது.

9-236/4

இலங்கை அரசாங்க அச்சகத்தார் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.